செய்தி மாலை

தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனம்

மடல்-68 ஆகஸ்டு, 2026

வங்கிகள் தேசியமயத்தின் 57வது ஆண்டு நிறைவு சிறப்புக் கூட்டம்-சென்னை

பல்வேறு மாவட்டங்களில் நமது சங்க உறுப்பினர்கள் உற்சாகத்துடன் அனுசரிப்பு

தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனத்தின் சார்பில் சென்னை **A K** நாயக் பவனில் **20-07-2026** அன்று வங்கிகள் தேசியமயத்தின் ஐம்பத்தி ஏழு ஆண்டுகள் நிறைவினைக் கொண்டாடும் வகையில் சிறப்புக் கூட்டம் நடைபெற்றது.



தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனத்தின் தலைவர் தோழர் **A** சிதம்பரம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் சென்னை நகரம் மற்றும் புறநகர் பகுதிகளில் பணியாற்றும் நமது சங்க உறுப்பினர்கள் பெருமளவில் கலந்துகொண்டனர்.

கூட்டத்தில் அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் தோழர் **C H** வெங்கடாசலம், தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் தோழர் **E** அருணாசலம் ஆகியோர் பங்கேற்று சிறப்புரை ஆற்றினர்.



தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் தோழர் **E** அருணாசலம் அவர்கள் தன்னுடைய உரையில், அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் இடைவிடாத போராட்டங்களின் விளைவாக இந்திய நாட்டில் இயங்கிவந்த தனியார் துறை வங்கிகள் **1969**ம் ஆண்டு அரசுடைமை ஆக்கப்பட்டன என்றும், அதன் விளைவாக ஏராளமான வங்கிக் கிளைகள் துவக்கப்பட்டதுடன், வங்கிச் சேவை அனைத்துப்பிரிவு மக்களுக்கும் கிடைக்கப்பெற்றது என்று விளக்கினார்.

கூட்டத்தில் சிறப்புரை ஆற்றிய தோழர் **C H** வெங்கடாசலம் அவர்கள், வங்கிகள் தேசியமயம் ஆனதன் விளைவாகவே, வங்கிகளில் பணியாற்றும் வாய்ப்பு நமக்கு கிடைத்தது என்றும், வலுவான போராட்டங்கள் மூலம் வங்கிகள் தேசியமயத்தினை பெற்றுத் தந்த போற்றுதலுக்குரிய நம் தலைவர்களான தோழர் பிரபாத்கர் மற்றும் தோழர் பர்வானா ஆகியோருக்கு வங்கி ஊழியர்கள் என்றென்றும் நன்றி உள்ளவர்களாக இருந்திட வேண்டும் என்று கூறினார். பெருமுதலாளிகளின் வசமிருந்த வங்கிகளை அரசுடைமை ஆக்கி, அந்த வங்கிகளின் நிர்வாகக் குழுக்களில் ஊழியர்களின் பிரதிநிதிகள் இடம்பெற வைத்தது அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் வரலாற்றுச் சாதனை என்று கூறினார்.



தற்போது வங்கி ஊழியர்கள் பெற்றுள்ள அனைத்து சலுகைகளும், பணிப் பாதுகாப்பும் தேசியமயத்தின் விளைவாகவே நாம் அடைந்துள்ளோம் என்றும், தற்போதைய ஒன்றிய அரசாங்கத்தின் பொதுத்துறை விரோத நடவடிக்கைகளை முறியடித்து பொதுத்துறை வங்கிகளை பாதுகாப்பது நமது கடமை என்றும் தோழர் **C H** வெங்கடாசலம் அவர்கள் வலியுறுத்தினார்.

கோவை மாவட்ட வங்கி ஊழியர் சங்கத்தின் சார்பில் **22-07-2026** கோவை மாநகரில் வங்கிகள் தேசியமய தின **57**ம் ஆண்டு நிறைவு விழா சிறப்புக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனத்தின் நிர்வாகிகள் மற்றும் மாவட்ட சங்கப் பொறுப்பாளர்கள் பங்கேற்று சிறப்புரை நிகழ்த்தினர். கோவை நகரில் பணியாற்றும் திரளான தோழர்கள் இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர்.



சேலம் மாவட்ட வங்கி ஊழியர் சங்கம் சார்பாக வங்கிகள் தேசியமய **57**வது ஆண்டு நிறைவு தினத்தினை குறிக்கும் வகையில் சேலத்தில் நடைபெற்ற கூட்டத்தில் நமது உறுப்பினர்கள் உற்சாகத்துடன் கலந்து கொண்டனர். இக்கூட்டத்தில் தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனத்தின் தலைவர் தோழர் **A** சிதம்பரம் அவர்கள் கலந்துகொண்டு பொதுத்துறை வங்கிகளின் அவசியத்தினையும், அவை நாட்டு வளர்ச்சிக்கு ஆற்றிடும் பங்கினையும் விளக்கிப் பேசினார்.



57-வது வங்கிகள் தேசியமயமாக்கல் தினத்தை முன்னிட்டு, மதுரை-ராமநாதபுரம் மாவட்ட வங்கி ஊழியர் சங்கம் சார்பில் (MRDBEU) மதுரை சேவாஸ்ரமத்தில் ஒரு சமூக நலத் திட்டம் நடைபெற்றது.



இந்நிகழ்ச்சியின் போது, அங்கு பயிலும் ஏழை மாணவர்களுக்கு பள்ளிப் பைகள் மற்றும் சீருடைகள் மாவட்ட சங்கத்தின் சார்பில் வழங்கப்பட்டது.



இச்சிறப்புக் கூட்டத்தில் அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் பொருளாளர் தோழர் குமரன் மற்றும் மாவட்ட சங்கப் பொறுப்பாளர்கள் ஆகியோர் பங்கேற்று சிறப்பித்தனர்.

இக்கூட்டத்தில் பெருமளவிலான தோழர்கள் பங்கேற்றனர்.

வங்கிகள் தேசியமயமாக்கப்பட்ட தினத்தை கொண்டாடும் விதமாக விருதுநகர் மாவட்ட வங்கி ஊழியர் சங்கத்தின் சார்பாக 16.07.2026 அன்று மாலை சிவகாசியில் இருசக்கர வாகன பிரச்சாரப் பேரணி நடைபெற்றது.



வாகனப் பேரணியிலும் அதனைத் தொடர்ந்து நடைபெற்ற கூட்டத்திலும் நமது உறுப்பினர்கள் உற்சாகத்துடன் கலந்து கொண்டனர். பேரணிக்கு முன்பாக நமது கோரிக்கை பதாதைகளை ஏந்தி ஒருமித்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.



மாவட்ட சங்க நிர்வாகிகள் ஒன்றிய அரசின் தனியார்மய நடவடிக்கைகளுக்கு எதிராக தொடர்ந்து போராட வேண்டியதன் அவசியத்தினை எடுத்துரைத்தனர். புதுச்சேரி, பொள்ளாச்சி, திருநெல்வேலி, சிவகங்கை, கரூர் போன்ற மையங்களிலும் தேசியமய தின சிறப்புக் கூட்டங்கள் நடைபெற்றன.

வங்கி ஊழியர் மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்

UFBU – IBA பேச்சு வார்த்தை - மேம்பாடுகள் குறித்த உடன்பாடு

வங்கி ஊழியர் மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் **1-11-2026** முதல் புதுப்பிக்கப்படவுள்ளது. தற்போதுள்ள காப்பீட்டில் அனுமதிக்கப்பட்டுள்ள சிகிச்சைகள் மற்றும் சலுகைகளை மேம்படுத்த **UFBU** பல்வேறு ஆலோசனைகளை இந்திய வங்கிகள் சங்கத்திடம் வழங்கியிருந்தது. அதனைத் தொடர்ந்து **17-07-2026** அன்று **IBA** மற்றும் **UFBU** அமைப்பின் உறுப்பு சங்கங்களுக்கு இடையே காப்பீட்டுத் திட்டத்தினை மேம்பாடுகளுடன் புதுப்பிப்பது குறித்த பேச்சுவார்த்தை நடைபெற்றது.



அக்கூட்டத்தில் இறுதி செய்யப்பட்டுள்ள மேம்பட்ட சலுகைகளின் முக்கிய அம்சங்களின் விபரங்கள்:

1. டெல்லி, மும்பை, சென்னை மற்றும் கொல்கத்தா ஆகிய நான்கு பெருநகரங்களில் உள்ள மருத்துவமனைகளில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்படும்போது, அறை வாடகைக்கான வரம்பு ரூ **7,000/-** ஆக உயர்த்தப்படும். பிற மையங்களுக்கு, தற்போதுள்ள ரூ **5,000/-** என்ற வரம்பே தொடரும்.
2. மேற்கூறிய நான்கு பெருநகரங்களில் உள்ள மருத்துவமனைகளில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்படும்போது, தீவிர சிகிச்சைப் பிரிவு (**ICU**) அனுமதிக்கான கட்டணம் ரூ **9,500/-** ஆக உயர்த்தப்படும். பிற மையங்களுக்கு, தற்போதுள்ள ரூ **7,500/-** என்ற வரம்பே தொடரும்.
3. மகப்பேறு மருத்துவச் செலவுகளுக்கான பலன், இயல்பான பிரசவத்திற்கு(**NORMAL DELIVERY**) ரூ **1,00,000/-** ஆகவும், அறுவை சிகிச்சை பிரசவத்திற்கு(**CAESAREAN SECTION**) ரூ **1,50,000/-** ஆகவும் உயர்த்தப்படும். குழந்தை பராமரிப்பு மற்றும் தடுப்பூசி தொடர்பான செலவுகளும் (குழந்தைக்கு ஒரு வயது ஆகும் வரை) இத்தொகையில் அடங்கும். தற்போதுள்ள காப்பீட்டில் அனுமதிக்கப்படும் ரூ **20,000/-** தொகையானது இந்த மாற்றியமைக்கப்பட்ட வரம்புகளுக்குள் இணைக்கப்பட்டுள்ளது.
4. தீவிர நோய் பாதிப்பு (**CRITICAL ILLNESS**) ஏற்படும் பட்சத்தில் ஊழியருக்கு வழங்கப்படும் கருணைத் தொகை (**EX-GRATIA**) ரூ **2,00,000/-** ஆக உயர்த்தப்படும்.
5. கண்புரை (**CATARACT**) சிகிச்சைக்கான வரம்பு ஒரு கண்ணுக்கு ரூ **50,000/-** ஆக உயர்த்தப்படுகிறது.
6. மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் சார்ந்திருப்பவர்களுக்கான (**DEPENDENT ELIGIBILITY**) வருமான வரம்பு ரூ **24,000/-** ஆக உயர்த்தப்பட்டுள்ளது.
7. தகுதியுள்ள ஊழியர்களுக்கு **INFERTILITY** சிகிச்சைக்கான (**IVF**) தனி வரம்பாக ரூ **2** லட்சம் நிர்ணயிக்கப்படும். இதற்கான காப்பீட்டுக் கட்டணத்தை (**PREMIUM**) வங்கியே ஏற்கும்.

8. மகப்பேறு மற்றும் **INFERTILITY** சிகிச்சை தொடர்பான காப்பீட்டுக் கட்டண விவரங்களை காப்பீட்டு நிறுவனத்திடமிருந்து தனித்தனியாகப் பெற்று, ஊழியர் சார்பாக வங்கி செலுத்த வேண்டிய மொத்தக் கட்டணத்தைக் கணக்கிடும்போது அவை சேர்க்கப்பட வேண்டும்.
9. தற்போதைய காப்பீட்டு நிறுவனமே அதே கட்டணத்தில் (கூடுதல் சேர்ப்புகள் அல்லது மேலே குறிப்பிடப்பட்ட மாற்றங்களுக்கான கூடுதல் கட்டணத்துடன் சேர்த்து) மேலும் ஓராண்டுக்குக் காப்பீட்டுத் திட்டத்தை நீட்டிக்க முன்வந்தால், அத்திட்டத்தை நீட்டிக்கலாம்.
10. காப்பீட்டுத் திட்ட நிர்வாக முகமையின் (**TPA**) செயல்பாடுகளைக் கண்காணிக்கும் நடைமுறை காலாண்டு அடிப்படையில் செயல்படுத்தப்படும். இது தொடர்பான ஆய்வுக் கூட்டங்களுக்குத் தொழிற்சங்கத் தலைவர்கள் சுழற்சி முறையில் அழைக்கப்படுவார்கள்.
11. பகல் நேரப் பராமரிப்பின் (**DAY CARE**) கீழ் பின்வருவன சேர்க்கப்படும்: (I) **ALBUMIN INFUSION** (II) **PERITONEAL DIALYSIS** (III) **ORAL CHEMOTHERAPY** (இச்சிகிச்சைக்கான செலவுகளில், மருந்துகளின் விலை, மருத்துவர் ஆலோசனைக் கட்டணம் மற்றும் அனைத்து மருத்துவப் பரிசோதனைகளின் கட்டணங்களும் அடங்கும்).



12. **DOMICILIARY TREATMENT** சிகிச்சையில் பின்வருவனவற்றைச் சேர்க்க முடிவு செய்யப்பட்டது. (I) டெங்கு மற்றும் சிக்குன்குனியா போன்ற பூச்சிகளால் பரவும் நோய்கள் (II) சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகத்தால் குரூப் **B** மற்றும் குரூப் **C**-இன் கீழ் பட்டியலிடப்பட்ட அரிய வகை நோய்கள்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து மேம்படுத்தப்பட்ட சலுகைகளும் **1** நவம்பர், **2026** புதிய காப்பீடு அமலாவது முதல் நடைமுறைக்கு வரும். தொழிற்சங்கங்களால் பரிந்துரைக்கப்படும் பிற மேம்பாடுகள், அவற்றின் சாத்தியக்கூறுகளை ஆராய்வதற்காகக் காப்பீட்டு நிறுவனங்களுடன் விவாதித்து மருத்துவக் காப்பீடு இறுதி செய்யப்படும்.

13வது இருதரப்பு ஒப்பந்தக் கோரிக்கைகளை பரிசீலித்து இறுதிசெய்ய தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனம் குழு அமைப்பு

தற்போதைய **12**-வது இருதரப்பு ஊதிய ஒப்பந்தம் (**12th BPS**) **31-10-2027** அன்று முடிவடைந்து, அடுத்த ஊதிய திருத்த ஒப்பந்தம் **1-11-2027** முதல் நடைமுறைக்கு வரவுள்ளது. புதிய ஒப்பந்தத்தை எட்டுவதில் ஏற்படும் தாமதத்தைத் தவிர்க்க, பேச்சுவார்த்தைகளை முன்கூட்டியே தொடங்க வேண்டும் என்று **AIBEA** வலியுறுத்தியுள்ளது.

இந்நிலையில், **AIBEA** தனது கோரிக்கைகள் அடங்கிய வரைவு அறிக்கையை (**CHARTER OF DEMANDS**) கூடிய விரைவில் **IBA**-விடம் சமர்ப்பிக்க உள்ளது. எனவே, இணைப்புச் சங்கங்கள் மற்றும் நமது உறுப்பினர்களிடமிருந்து ஆலோசனைகளைப் பெற்று, அக்கோரிக்கைகளை இறுதி செய்வதற்காக **AIBEA** ஒரு அகில இந்திய துணைக் குழுவை ஏற்கனவே அமைத்துள்ளது.



தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனத்தின் இணைப்புச் சங்கங்களிலிருந்து பெற்ற **13**வது இருதரப்பு ஒப்பந்தக் கோரிக்கை தொடர்பான ஆலோசனைகளை பரிசீலித்து இறுதி செய்வதற்கு **12** உறுப்பினர்களைக் கொண்ட துணைக்குழுவினை தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனம் அமைத்துள்ளது. இக்குழுவின் உறுப்பினர்கள் பின்வருமாறு:

தோழர் **K** கௌதம் - ஒருங்கிணைப்பாளர்	இணைச் செயலாளர், **TNBEF**
தோழர் **J** சுரேஷ் குமார்	பேங்க் ஆப் பரோடா
தோழர் செந்தில் குமார்	சென்ட்ரல் பேங்க் ஆஃப் இந்தியா
தோழர் மோகனா	பஞ்சாப் நேஷனல் வங்கி
தோழர் திலீப் குமார்	இந்தியன் வங்கி
தோழர் சிவபெருமாள்	பாங்க் ஆஃப் இந்தியா
தோழர் மோகனசுந்தரம்	கனரா வங்கி
தோழர் யுவராஜ்	யூகோ வங்கி
தோழர் ரீனா ஜோசப்	புதுச்சேரி
தோழர் சுரேஷ்	யூனியன் வங்கி
தோழர் அருண்	கனரா வங்கி
தோழர் லோகேஸ்வரன்	கரூர் வைசியா வங்கி

விழுப்புரம் மாவட்ட வங்கி ஊழியர் சங்கத்தின் மாநாடு - 19-07-2026

விழுப்புரம் மாவட்ட வங்கி ஊழியர் சங்கத்தின் **5**-வது மாநாடு விழுப்புரம் நகரில் **19-07-2026** அன்று பெருந்திரளான தோழர்களின் பங்கேற்புடன் சிறப்புற நடைபெற்றது. மாநாட்டினை தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் தோழர் **E** அருணாசலம் அவர்கள் துவக்கி வைத்தார்.



அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் தோழர் **C H** வெங்கடாசலம் அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார்.

சம்மேளனத்தின் தலைவர் தோழர் **A** சிதம்பரம் மற்றும் இணைப்புச் சங்கங்களின் நிர்வாகிகள் மாநாட்டில் கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்கினர்.



மாநாட்டில் தோழர் **L** நாராயணசாமி (இந்தியன் வங்கி) அவைத் தலைவராகவும், தோழர் **D K** ராஜா (**VDCC BANK**) தலைவராகவும், தோழர் **S** அமீர் பாஷா (இந்தியன் வங்கி) பொதுச் செயலாளராகவும், தோழர் குமரேசன் (**PNB**) பொருளாளராகவும் ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகிகள் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் சிறப்பாகச் செயல்பட தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனம் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறது.

புதுக்கோட்டை மாவட்ட வங்கி ஊழியர் சங்க 8வது மாநாடு - 04-07-2026



புதுக்கோட்டை மாவட்ட வங்கி ஊழியர் சங்கத்தின் **8**-வது மாநாடு **04-07-2026** அன்று புதுக்கோட்டை நகரில் சிறப்புற நடைபெற்றது.

மாநாட்டினை தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் தோழர் **E** அருணாசலம் அவர்கள் துவக்கி வைத்து சிறப்புரை ஆற்றினார். மாவட்ட வங்கி ஊழியர் சங்கத்தின் நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் பெருமளவில் மாநாட்டில் பங்கேற்றனர்.



மாநாட்டில் தோழர் **K N** ராஜேந்திரன் அவர்கள் அவைத் தலைவராகவும், தோழர் **K** சிவானந்தம் அவர்கள் தலைவராகவும், தோழர் **D** பிரபு அவர்கள் பொதுச் செயலாளராகவும், தோழர் பாலசுப்பிரமணியன் அவர்கள் பொருளாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட புதுக்கோட்டை மாவட்ட வங்கி ஊழியர் சங்கத்தின் நிர்வாகிகளை தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனம் பாராட்டி வாழ்த்துகின்றது.

கூட்டுறவு வங்கி ஊழியர் சங்கச் செய்திகள்

மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி ஊழியர் சங்கத் தலைவர்கள் மற்றும் பொதுச் செயலாளர்கள் கூட்டம் – சென்னை - 03-07-2026

ஜூலை 3, 2026 அன்று சென்னையில் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி ஊழியர் சங்கங்களின் தலைவர்கள் மற்றும் பொதுச் செயலாளர்கள் கூட்டம் நடைபெற்றது.



இக்கூட்டத்தில் அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் தோழர் **C H** வெங்கடாசலம், தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனத்தின் பொதுச்செயலாளர் தோழர் **E** அருணாசலம் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இணைப்பு சங்கத் தலைவர்கள் மற்றும் பொதுச் செயலாளர்கள், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளின் இளம் தோழர்கள், மாநில சங்கப் பொறுப்பாளர்கள், தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கி ஊழியர் சங்கம் மற்றும் அதிகாரிகள் சங்கத்தின் முக்கியப் பிரதிநிதிகள் உட்பட சுமார் 120 தோழர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு கூட்டுறவு வங்கி ஊழியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் தோழர் **G** வைரப்பன் அவர்கள் தன்னுடைய துவக்க உரையில் சமீபத்தில் முடிவுற்ற **AIBEA** மாநாட்டின் வெற்றிகரமான செயல்பாடுகள், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி ஊழியர்களின் நீண்டகால பிரச்சினைகள் மற்றும் நமது சங்கங்களை வலுப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து பேசினார்.



கூட்டத்திற்குத் தலைமை வகித்த தோழர் **C H** வெங்கடாசலம் அவர்கள் கூட்டுறவு வங்கிகள் மற்றும் அதன் ஊழியர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் தொடர்பானவைகளை எடுத்துரைத்தார்.

தமிழகத்தில் மாறிவரும் அரசியல் சூழலில், நிலுவையில் உள்ள கோரிக்கைகளை புதிய சூழலுக்கு ஏற்ற வகையில் தொடர வேண்டியதன் அவசியத்தை அவர் வலியுறுத்தினார். மேலும், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி ஊழியர்களிடையே ஒற்றுமையின் முக்கியத்துவத்தை வலியுறுத்திய அவர், நமது சங்கத்தை மேலும் வலுப்படுத்த மாவட்ட கூட்டுறவு வங்கிகளில் உள்ள ஊழியர்களை நமது சங்கத்தில் சேர்க்க முயற்சிகளை நிர்வாகிகள் மேற்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தினர்.



தொடர்ந்து, தோழர் **A** சுப்ரமணியன் (நகர வங்கி), தோழர் **T** சுரேஷ் (கன்னியாகுமரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி), மாநில சங்கத்தின் மூத்த தோழர் **G** ஆறுமுகம் (வேலூர் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி) மற்றும் பொருளாளர் **M** யுவராஜ் (திருவண்ணாமலை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி) மற்றும் மத்திய கூட்டுறவு வங்கி ஊழியர் சங்க நிர்வாகிகள் தங்கள் கருத்துக்களை எடுத்துரைத்தனர்.

தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனத்தின் பொதுச்செயலாளர் தோழர் **E** அருணாச்சலம் அவர்கள் தன்னுடைய சிறப்புரையில், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளில் உள்ள ஊழியர்களின் நலனுக்காக நமது சங்கம் தொடர்ந்து போராடி வருவதை எடுத்துரைத்தார். மாநிலத்தில் உள்ள மத்திய கூட்டுறவு வங்கி ஊழியர்களிடையே ஒற்றுமையின் அவசியத்தை தோழர் **E** அருணாச்சலம் அவர்கள் வலியுறுத்தினார்.

தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் பதிவாளருடன் AIBEA பொதுச் செயலாளர் தோழர் C H வெங்கடாசலம் சந்திப்பு

கூட்டுறவு வங்கி ஊழியர்களின் நிலுவையிலுள்ள பிரச்சனைகளுக்கு தீர்வு காண வலியுறுத்தல்

கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் திருமதி **G** லதா, **I.A.S.** அவர்களை **AIBEA** பொதுச் செயலாளர் தோழர் **C H** வெங்கடாசலம் அவர்கள் **28.07.2026** அன்று சந்தித்தார். இச்சந்திப்பின் போது தமிழ்நாடு கூட்டுறவு வங்கி ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் மற்றும் ஏனைய நிர்வாகிகள் உடனிருந்தனர்.

கூட்டுறவு வங்கி ஊழியர்களின் நீண்ட காலமாக நிலுவையில் உள்ள கீழ்க்கண்ட கோரிக்கைகள் குறித்து பதிவாளரிடம் எடுத்துரைக்கப்பட்டு அவற்றிற்கு உரிய தீர்வு காண தோழர் தோழர் **C H** வெங்கடாசலம் அவர்கள் வலியுறுத்தினார்.

- மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளில் பணியாளர் பணி நிலைத்திறனை மாற்றி அமைப்பது
- உதவி மேலாளர் பணி நிலையில் நேரடி நியமனத்திற்காக தற்போது ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள காலிப் பணியிடங்களை பதவி உயர்வு மூலம் நிரப்பிடுவது
- ஓய்வு பெற்ற அனைத்து கூட்டுறவு வங்கி ஊழியர்களுக்கும் ரூ.**10,000/-** கருணை ஓய்வூதியம் வழங்குவது
- தற்போது பணியில் இருக்கும் ஊழியர்களுக்கு குறைந்தபட்சமாக ஒரு பங்களிப்பு ஓய்வூதிய திட்டத்தை உருவாக்குவது
- ஊழியர்களுக்கு மருத்துவ காப்பீட்டு திட்டம் ஏற்படுத்துவது
- கூட்டுறவு வங்கிகளில் தொழில் நுட்ப சேவைகளை மேம்படுத்துவது
- கூட்டுறவு வங்கி ஊழியர்களின் ஊதிய முரண்பாடுகளை களைவது
- நகர கூட்டுறவு வங்கி ஊழியர்களின் வீட்டு வசதி கடன் உள்ளிட்ட அனைத்து ஊழியர் கடன்களுக்கும் விதிமுறைகளை வகுப்பது
- தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் நீண்டகால கடன் வழங்கிட ஆவண செய்வது
- தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க ஊழியர்களது நிலுவையிலுள்ள பிரச்சனைகளுக்கும் தீர்வு காண்பது.

இச்சந்திப்பின்போது கூட்டுறவு வங்கிகளில் முதன்மை நிர்வாக அதிகாரிகள் மற்றும் நிர்வாக இயக்குநர்களை ரிசர்வ் வங்கி வகுத்துள்ள **FIT AND PROPER CRITERIA** நிபந்தனையின்படி நியமிப்பது, இனி வரும் காலங்களில் கூட்டுறவு வங்கிகளில் பணியாளர்களை **IBPS** மூலம் தேர்வு செய்வது உள்ளிட்ட கருத்துக்களும் முன்வைக்கப்பட்டன.

தோழர் **C H** வெங்கடாசலம் தெரிவித்த இக்கருத்துக்களை பெரிதும் வரவேற்ற கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் அவர்கள் இதன் மீது ஆலோசித்து முடிவுகள் எடுக்கப்படும் என்று தெரிவித்துள்ளார். கூட்டுறவு வங்கிகள் வங்கியியல் நிபுணத்துவம் வாய்ந்த அதிகாரிகளால் நிர்வகிக்கப்பட வேண்டும் என்பதில் தனக்கு முழு உடன்பாடு உள்ளதென்றும் பதிவாளர் அவர்கள் தெரிவித்தார். மேலும் கூட்டுறவு வங்கிகளில் முறையாக கொடுக்கப்படும் கடன்கள் வசூலாகாத போது அதற்கு மேலாளர்களை பொறுப்பாக்குவது முற்றிலும் தவிர்க்கப்பட வேண்டும் என்ற கருத்தும் முன்வைக்கப்பட்டது. ஊழியர்கள் சார்பாக முன்வைக்கப்பட்ட அனைத்து பிரச்னைகளுக்கும் சட்டசபை கூட்டத்தொடர் முடிவுற்ற பின்னர் உரிய தீர்வு காணப்படும் என்று தெரிவித்தார்.

கூட்டுறவு வங்கிகளின் செயல்பாடுகள் முழு வெளிப்படைத்தன்மை உறுதி செய்யப்படும் என்றும், இதற்காக தமிழ்நாடு கூட்டுறவு வங்கி ஊழியர் சங்கத்தின் ஆலோசனைகள் வரவேற்கப்படுமென்றும் பதிவாளர் தெரிவித்துள்ளார். பதிவாளருடன் நடைபெற்ற இச்சந்திப்பு நல்லதொரு துவக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகளின் தேசிய மாநாடு - புது டில்லி

மக்கள் விரோதக் கொள்கைகளுக்கு எதிரான ஒருங்கிணைந்த போராட்டங்களை தீவிரப்படுத்த தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகளின் தேசிய மாநாடு தீர்மானம்

மத்திய தொழிற்சங்கங்கள் (**CTU**), துறைசார் கூட்டமைப்புகள் மற்றும் சங்கங்கள் மற்றும் சம்யுக்த கிசான் மோர்ச்சா (**SKM**) இணைந்து நடத்திய தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகளின் தேசிய மாநாடு **29** ஜூலை **2026** அன்று புது டில்லியில் நடைபெற்றது.

இம்மாநாட்டில் அனைத்து முக்கிய மத்திய தொழிற்சங்கங்கள், துறைவாரியான தொழிற்சங்கங்கள் மற்றும் விவசாயிகளின் அமைப்புகள் கலந்துகொண்டன. அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் நிர்வாகிகளும் இம்மாநாட்டில் கலந்து கொண்டனர்.

பொதுத்துறை ஊழியர்கள், போக்குவரத்து தொழிலாளர்கள், வங்கி மற்றும் காப்பீட்டு ஊழியர்கள், ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள், பெண் தொழிலாளர்கள், இளைஞர்கள், ஓய்வூதியம் பெறுவோர் என அனைத்து துறையிலிருந்தும் ஆயிரக்கணக்கான தொழிலாளர்களும் நாடு முழுவதிலிமிருந்தும் அணி திரண்டிருந்த விவசாயிகளுடன் கைகோர்த்து மாநாட்டில் பங்கேற்றனர்.



உழைக்கும் மக்களுடைய வாழ்வாதாரங்கள், அரசியலமைப்பு உரிமைகள் மற்றும் தேசிய நலன்களைப் பாதுகாப்பதில் தொழிலாளர்கள், விவசாயிகள், மாணவர்கள், இளைஞர்கள் மற்றும் சமூகத்தின் அனைத்து ஜனநாயகப் பிரிவினரின் ஒற்றுமையை வலுப்படுத்துவதற்கு மாநாடு அறைகூவல் விடுத்தது.

தீவிரமடைந்து வரும் பொருளாதார நெருக்கடி, அதிகரித்து வரும் வேலையின்மை, முன்னெப்போதும் இல்லாத விலைவாசி உயர்வு, பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் பொதுச் சேவைகளின் தனியார்மயமாக்கல், தொழிலாளர் சட்டத் தொகுப்புகள் (**LABOUR CODES**) மூலம் தொழிற்சங்க உரிமைகள் மீதான தாக்குதல்கள், விவசாயிகளின் கோரிக்கைகள் புறக்கணிக்கப்படுதல், இந்திய நாட்டின் இறையாண்மைக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வெளிநாட்டு வர்த்தக ஒப்பந்தங்கள், சுருங்கி வரும் ஜனநாயக வெளி மற்றும் மதம், சாதி மற்றும் பிற பிரிவினைவாத அடிப்படையில் மக்களைப் பிளவுபடுத்தும் முயற்சிகள் ஆகிய அரசாங்கத்தின் மக்கள் விரோதக் கொள்கைகளுக்கு எதிராக அனைத்து பங்கேற்பாளர்களும் ஒன்றிணைந்து குரல் கொடுத்தனர்.

தொழிலாளர்கள், விவசாயிகள் மற்றும் அனைத்து ஜனநாயக சக்திகளின் ஒருங்கிணைந்த இயக்கம் மட்டுமே அரசியலமைப்பைத் திறம்படக் காக்கவும், மக்களுடைய வாழ்வாதாரங்களைப் பாதுகாக்கவும், இந்தியாவின் மதச்சார்பற்ற மற்றும் ஜனநாயகத் தன்மையைக் காப்பாற்றவும் முடியும் என்று மாநாட்டில் உரையாற்றிய தலைவர்கள் வலியுறுத்தினர்.



பின்வரும் கோரிக்கைகளை வலியுறுத்தும் பிரகடனத்தை மாநாடு நிறைவேற்றியது

➤ தொழிலாளர் சட்ட விதிகள் (**LABOUR CODES**) மற்றும் ஒழுங்குமுறைகளை ரத்து செய்தல். முறைசார் மற்றும் முறைசாரா தொழிலாளர்களுக்கும் தொழிற்சங்கம் அமைக்கும் உரிமை, அங்கீகாரம், 8 மணி நேர வேலை நாள், பணியிடப் பாதுகாப்பு, சமூகப் பாதுகாப்பு, வேலைநிறுத்தம் செய்யும் உரிமை, கூட்டுப் பேர உரிமை ஆகியவற்றை உறுதி செய்தல்.

➤ அனைத்துப் பயிர்களுக்கும் உத்தரவாதமான கொள்முதலுடன் குறைந்தபட்ச ஆதரவு விலையை (**MSP**) உறுதி செய்வதுடன் விவசாயிகள் மற்றும் ஏழை மக்களுக்கு விரிவான கடன் தள்ளுபடி வழங்க வேண்டும்.

➤திட்டப் பணியாளர்கள் மற்றும் பகுதிநேரப் பணியாளர்கள் உட்பட அனைத்துத் தொழிலாளர்களுக்கும் அகவிலைப்படியுடன் (**DA**) இணைக்கப்பட்ட குறைந்தபட்ச ஊதியம் ரூ. 42,000 ஆக உயர்த்தி வழங்குதல்.

➤ மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தை (**MGNREGA**) மீண்டும் கொண்டுவர வேண்டும்.

➤பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் பொதுச் சேவைகளின் தனியார்மயமாக்கல் நடவடிக்கைகளை நிறுத்த வேண்டும். புதிய பணியிடங்களை உருவாக்கி தேவையான பணி நியமனங்களை உறுதி செய்வதோடு, பழைய ஓய்வூதிய திட்டத்தை (**OPS**) மீண்டும் அமல்படுத்த வேண்டும்.

➤ வேலைவாய்ப்பை உருவாக்குதல், பொதுக் கல்வி மற்றும் சுகாதாரத்தை வலுப்படுத்துதல், கடுமையான சட்டங்களைத் திரும்பப் பெறுதல் மற்றும் அரசியலமைப்பு மற்றும் ஜனநாயக உரிமைகளைப் பாதுகாத்தல்.

மேற்கண்ட கோரிக்கைகள் குறிப்பிட்ட காலத்திற்கும் நிறைவேற்றப்படாவிடில், போராட்டங்களை தீவிரப்படுத்த தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகளின் தேசிய மாநாடு முடிவு செய்தது.

மாநாட்டின் முக்கிய முடிவுகள் மற்றும் போராட்ட நடவடிக்கைகள்

நாடு முழுவதும் தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகளின் ஒருங்கிணைந்த போராட்டங்களைத் தீவிரப்படுத்த மாநாடு தீர்மானித்தது. உடனடி செயல் திட்டத்தின் ஒரு பகுதியாக, வெள்ளையனே வெளியேறு இயக்கத்தை நினைவுகூரும் வகையில், 2026 ஆகஸ்ட் 10 அன்று மாவட்ட மற்றும் மாநில அளவிலான ஆர்ப்பாட்டங்கள், ரயில் மறியல், சாலை மறியல், பணியிடப் பேரணிகள், மனித சங்கிலிகள் மற்றும் வெகுஜன அணிதிரட்டல் மூலம் நாடு தழுவிய போராட்டங்களை நடத்த மாநாடு அழைப்பு விடுத்தது.

கோரிக்கைகள் நிறைவேற்றப்படாவிட்டால் மாநில அளவிலான போராட்ட ஆயத்த மாநாடுகள்



ஏற்பாடு செய்யவும், பெரிய அளவிலான நாடு தழுவிய நேரடி நடவடிக்கை திட்டங்களுக்குத் தயாராகவும் மாநாடு தீர்மானித்தது. தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகளின் ஒற்றுமையை மேலும் வலுப்படுத்தவும், சர்வாதிகாரப் போக்குடன் செயல்படும் ஒன்றிய அரசாங்கத்தை எதிர்கொள்வதற்கான போராட்டங்களை தீவிரப்படுத்தவும் மாநாடு வலுவான, ஒருங்கிணைந்த அறைகூவலை விடுத்துள்ளது.

தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகளின் ஒற்றுமையை மேலும் வலுப்படுத்துதல், ஜனநாயக இயக்கங்களுடனான தோழமையை விரிவுபடுத்துதல், மற்றும் சமத்துவம், சமூகநீதி, மதச்சார்பின்மை ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்த சமூகத்தை நோக்கிய போராட்டத்தை முன்னெடுத்துச் சென்றிட மாநாடு தீர்மானித்தது.

தங்கள் ஒற்றுமையை வலுப்படுத்தவும் போராட்டத்தை தீவிரப்படுத்தவும் இந்திய உழைக்கும் மக்களின் அசைக்க முடியாத உறுதியை மீண்டும் உறுதிப்படுத்தியவாறு, இம்மாநாடு வெற்றிகரமாக நிறைவடைந்தது. தங்கள் கோரிக்கைகள் நிறைவேறும் வரை இப்போராட்டத்தை முன்னெடுத்துச் செல்ல மாநாட்டில் பங்கேற்றவர்கள் புதிய உறுதியுடன் சபதம் ஏற்றனர். "ஒன்றுபடுங்கள், அணிதிரளுங்கள், போராடுங்கள் - வெற்றி நம் வசமாகும்" என்ற அறைகூவல் மாநாட்டின் முழக்கமாக அமைந்தது.

பெரும் வங்கிக் கடன் வாங்கியவர்கள் தொடர்ந்து வங்கிகளை ஏமாற்றுகின்றனர்
ஆனால் அரசாங்கம் அவர்களுக்கு அளிப்பதோ சன்மானம் மற்றும் சலுகைகள்

பொதுத்துறை வங்கிகளின் கடின உழைப்பால் ஈட்டப்பட்ட லாபத்தில் பெரும் பகுதி வாராக் கடன்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படுகின்றது. இந்த ஒதுக்கீட்டுக் கணக்கிலிருந்தே, திருப்பிச் செலுத்தப்படாத பெருநிறுவனங்களின் பெரும் கடன் தொகைகள் ஒன்றிய அரசால் தள்ளுபடி செய்யப்படுகின்றன.

Period	Amount due to Banks by borrowers as admitted	Amount realized	Amount foregone / sacrifice by Banks	Haircut to Banks
2021-2022	1,92,500 cr	46,198 cr	1,46,302 cr	76 %
2022-2023	1,38,800 cr	54,125 cr	84,675 cr	61 %
2023-2024	1,59,800 cr	44,736 cr	1,15,064 cr	72 %
2024-2025	1,47,600 cr	54,604 cr	92,996 cr	63 %
2025-2026	2,10,000 cr	42,003 cr	1,67,997 cr	80 %
In 5 years	8,48,700 cr	2,41,666 cr	6,07,034 cr	72 %

Source : Reply in Rajya Sabha Question No. 224

2014ம் ஆண்டு முதல் **2025-26**ம் ஆண்டு வரையியிலான காலத்தில் பெரிய தொழில் நிறுவனங்களுக்காக ஆண்டு தோறும் தள்ளுபடி செய்யப்பட்ட ரூ **7.75** லட்சம் கோடியில், ரூ **3.10** லட்சம் கோடி மட்டுமே திரும்பப் பெறப்பட்டுள்ளது. எனவே, நிகரத் தள்ளுபடித் தொகை ரூ **4,65,000** கோடியாகும்.



கடந்த **10** ஆண்டுகளில் **12** பொதுத்துறை வங்கிகளின் மொத்தச் செயல்பாட்டு லாபம் **(OPERATING PROFIT)**: ரூ **21** லட்சம் கோடி; வாராக் கடன்களுக்கான ஒதுக்கீடு **(PROVISION FOR BAD LOAN)**: ரூ **18** லட்சம் கோடி; நிகர லாபம் **(NET PROFIT)**: ரூ **3** லட்சம் கோடி. இவ்வாறு பொதுத்துறை வங்கிகளின் லாபம் சூறையாடப்படுகின்றது.

வங்கிகள் வளமுடன் இயங்கக் காரணமான சேமிப்புக் கணக்கு வைத்திருக்கும் வாடிக்கையாளருக்கு அரசாங்கம் விதித்த அபராதமோ ரூ 7100 கோடி

2025-26 நிதியாண்டில், வாடிக்கையாளர்கள் தங்கள் கணக்குகளில் குறைந்தபட்ச சராசரி இருப்பை (AVERAGE MINIMUM BALANCE) பராமரிக்கத் தவறியதற்காக வங்கிகள் சுமார் ரூ. 7,100 கோடியை அபராதமாக வசூலித்துள்ளன. முந்தைய ஆண்டில் இது சுமார் ரூ. 6,800 கோடியாக இருந்தது என்று ஒன்றிய அரசு நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளது. இந்த அபராதத் தொகையில் சுமார் 70 சதவீதம் (ரூ 4,948 கோடி) தனியார் வங்கிகளால் வசூலிக்கப்பட்டுள்ளது. 2025-26 நிதியாண்டில் தனியார் வங்கிகளின் குறைந்தபட்ச சராசரி இருப்பிற்கான அபராத வசூல் 17 சதவீதம் அதிகரித்துள்ளது.



அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் தொடர் முயற்சிகளால், 12 பொதுத்துறை வங்கிகளில் (PSBs) 10 வங்கிகள் சேமிப்புக் கணக்குகளில் குறைந்தபட்ச சராசரி இருப்பை (MAB) பராமரிக்காததற்கான அபராதக் கட்டணங்களை ரத்து செய்துள்ளன. அதேவேளையில், மற்ற இரண்டு வங்கிகள் தங்கள் நிர்வாகக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட கொள்கைகள் மற்றும் வணிக ரீதியான காரணங்களின் அடிப்படையில் அக்கட்டணங்களைச் சீரமைத்துள்ளன. இதன் விளைவாக, 12 பொதுத்துறை வங்கிகளின் அபராதக் கட்டண வசூல், 2025-26 நிதியாண்டில் (FY26) ரூ 2,137 கோடியாக உள்ளது.

(IN CRORES)

STATE BANK OF INDIA	**477.24**	**UNION BANK OF INDIA**	**122.90**
BANK OF BARODA	**394.10**	**UCO BANK**	**92.14**
INDIAN BANK	**299.17**	**INDIAN OVERSEAS BANK**	**81.33**
CANARA BANK	**213.48**	**BANK OF INDIA**	**63.50**
PUNJAB NATIONAL BANK	**206.68**	**PUNJAB AND SIND BANK**	**27.10**
CENTRAL BANK OF INDIA	**141.25**	**BANK OF MAHARASHTRA**	**19.00**

தனியார்துறை வங்கிகளில் HDFC வங்கி மட்டும் சுமார் ரூ. 1,800 கோடியை வசூலித்துள்ளது. அதைத் தொடர்ந்து AXIS வங்கி ரூ 1,081 கோடி, ICICI வங்கி ரூ 353 கோடியும், KOTAK MAHINDRA வங்கி ரூ 290 கோடியையும், YES வங்கி ரூ 195 கோடியும், IDBI வங்கி ரூ 175 கோடியும் வசூலித்துள்ளன.

2021-22 நிதியாண்டு முதல், பொதுத்துறை வங்கிகள் குறைந்தபட்ச சராசரி இருப்பு (MAB) கட்டணமாக சுமார் ரூ. 12,000 கோடியும், தனியார் வங்கிகள் வாடிக்கையாளர்களிடமிருந்து அபராதமாக மொத்தம் சுமார் ரூ. 16,000 கோடியும் வசூலித்துள்ளன. இவ்வாறு வங்கி வாடிக்கையாளர்களின் சேமிப்புகள் சூறையாடப்படுகின்றது.

‘இந்திய நாட்டில் மாற்றுக்கருத்துகளுக்கான இடம் தொடர்ந்து சுருங்கி வருகிறது’

அமைதியான விவாதமும் கருத்து வேறுபாடும் ஜனநாயகத்தின் சாராம்சம் - ஆனால் அவை கைதுகள், நீண்டகால சிறைவாசம் மற்றும் கடுமையான பிணை நிபந்தனைகளால் எதிர்கொள்ளப்படுகின்றன - உச்சநீதிமன்ற நீதிபதி வேதனை

போபாலில் உள்ள தேசிய சட்டப் பல்கலைக்கழகத்தில் (NLIU) நடைபெற்ற நீதிபதி G P சிங் நினைவு சொற்பொழிவில் உச்ச நீதிமன்ற நீதிபதி உஜ்ஜல் புயான் அவர்கள் கலந்து கொண்டு உரையாற்றியபோது ‘இந்தியாவில் மாற்றுக்கருத்து தெரிவிப்பதற்கான கட்டுப்பாடுகளுக்கு மத்தியில், ஜனநாயக வெளி சுருங்கி வருவதாக’ வேதனை தெரிவித்தார்.

சட்டவிரோதமற்ற செயல்களுக்காகப் போராடுவோரை கைது செய்வது மற்றும் கருத்துரிமை மீதான கட்டுப்பாடுகளை விதிப்பதால், இந்தியாவின் ஜனநாயக வெளி சுருங்கி வருவதாக நீதிபதி புயான் எச்சரிக்கிறார். கருத்து வேறுபாட்டை வெளிப்படுத்துவதற்கான சட்டபூர்வமான வழிகள்கூட தற்போது குற்றமாக்கப்படுகின்றன என்று நீதிபதி புயான் கூறினார்.



மாணவர்கள், சமூக ஆர்வலர்கள் மற்றும் சாதாரண குடிமக்கள் தங்கள் அடிப்படை உரிமைகளைப் பயன்படுத்தி போராட்டம் நடத்துவதற்கும், தங்கள் கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கும் அஞ்சிடும் வகையில் அவர்கள் நீதிமன்றங்களால் குற்றவாளிகளாக ஆக்கப்படுகிறார்கள் என்று வேதனையினை வெளிப்படுத்தினார். அமைதியான விவாதம் மற்றும் கருத்து வேறுபாடு ஆகியவை ஜனநாயகத்தின் சாராம்சம். ஆனால் கைதுகள், நீண்டகால சிறைவாசம் மற்றும் கட்டுப்படுத்தப்பட்ட ஜாமீன் நிபந்தனைகள் ஆகியவை அதிகரித்து வருகின்றன என்று நீதிபதி புயான் கூறினார்.

கல்லூரி வளாகங்களில் போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்களுக்கு நீண்ட காலத்திற்கு ஜாமீன் மறுக்கப்பட்ட நிகழ்வுகள் குறித்து அவர் கேள்வி எழுப்பியதுடன், கருத்து சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தும் வகையிலான ஜாமீன் நிபந்தனைகளை விதித்ததற்காக நீதிமன்றங்களையும் அவர் விமர்சித்தார்.

கங்கை நதியில் படகில் வைத்து அசைவம் சாப்பிடுவது சட்டப்படி குற்றமில்லை. ஆனால் மத்தியப் பிரதேச பாஜக அரசின் காவல்துறை புனித நதியை அசுத்தம் செய்வதாக கூறி 14 இசுலாமிய இளைஞர்களை கைது செய்தது. அவர்களுக்கு ஜாமீன் மறுக்கப்பட்டு 3 மாதம் சிறையில் கழித்தனர். இந்த சம்பவம் தேசத்தின் குடிமக்கள் அரசியலமைப்பு தங்களுக்கு வழங்கிய சட்டபூர்வ உரிமையின் கீழ் செயல்படும்போதும் குற்றவியல் வழக்குகளை எதிர்கொள்ளும் போக்கை காட்டுவதாக நீதிபதி உஜ்ஜல் புயான் வேதனை தெரிவித்தார்.


மும்பையில் காசா (GAZA) மக்களுக்கு ஆதரவாகப் போராட்டம் நடத்த அனுமதி கோரியபோது, "இந்தியாவில் உங்களுக்குப் பிரச்சனைகளே இல்லையா? காசாவுக்காக போராடுவது தேசபக்தி அல்ல" என்று மும்பை உயர் நீதிமன்றம் கூறியதையும் நீதிபதி உஜ்ஜல் புயான் சுட்டிக்காட்டி விமர்சித்தார். அமைதியான முறையில் மனித உரிமைப் பிரச்சினைகளுக்கு ஆதரவு தெரிவிப்பதும் ஜனநாயக உரிமையே என்றும், நீதிமன்றங்கள் இதுபோன்ற கருத்துச் சுதந்திரத்தைக் முடக்கும் வகையில் கருத்து தெரிவிக்கக் கூடாது என்றும் அவர் கூறினார்.



சாதாரணப் போராட்டங்கள், சமூக வலைத்தளப் பதிவுகள் மற்றும் மீம்களுக்குக்கூட கடுமையான குற்றவியல் சட்டங்களைப் பயன்படுத்துவது தனிநபர் சுதந்திரத்தைப் பறிப்பதாகும்.

ஜாமீன் வழங்கினாலும், அது நீண்டகாலச் சிறைவாசத்திற்கு பிறகே கிடைக்கிறது. மேலும் பொதுக்கூட்டங்களில் பேசக்கூடாது, சமூக வலைத்தளங்களை பயன்படுத்தக் கூடாது, என்ற ஜாமீன் நிபந்தனைகள் மக்களின் அடிப்படை உரிமைகளை மறைமுகமாக முடக்குகின்றன.

பல்கலைக்கழக நிர்வாகங்கள் மாணவர் செயல்பாடுகளைத் தண்டிப்பதை விட, விமர்சன சிந்தனையையும் விவாதத்தையும் ஊக்குவிக்கும் இடங்களாக இருக்க வேண்டும் என்று அவர் கூறினார். ஓய்வுபெற்ற நீதிபதிகள் பதவியை விட்டு விலகிய உடனேயே அரசியலில் நுழைவதற்கு எதிராக நீதிபதி புயான் எச்சரித்தார். இத்தகைய நடவடிக்கைகள் நீதித்துறைக்கும் நிர்வாகத்துறைக்கும் இடையிலான அரசியலமைப்பு வேறுபாட்டை மங்கச் செய்கின்றன என்று அவர் கூறினார்.



நீட் வினாத்தாள் கசிவு விவகாரத்தில் காக்ரோச் ஜனதா கட்சி (CJP) முன்னெடுத்த நீண்டகால போராட்டத்துக்குப் பிறகு, மத்திய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் ராஜிநாமா செய்த நிலையில் நீதிபதி புயானின் இந்தக் கருத்து வெளியாகியுள்ளது.

ஒரு மாதத்துக்கும் மேலாக நீடித்த இந்தப் போராட்டத்தின் போது, ஜூலை 20 அன்று நாடாளுமன்றத்தை நோக்கி நடைபெற்ற பேரணியில் வன்முறை வெடித்ததில் பல போராட்டக்காரர்களும் சில காவல்துறையினரும் காயமடைந்தனர். இச்சம்பவத்தை உடனடியாக விசாரிக்கக்கூட தலைமை நீதிபதி மறுத்தது அனைவரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது.

பிரச்சினைகளின் மூல காரணங்களுக்குத் தீர்வு காண்பதற்குப் பதிலாக, இத்தகைய நியாயமான ஜனநாயகப் போராட்டங்களை ஒடுக்க மேற்கொள்ளப்படும் எந்தவொரு முயற்சியையும் சமூகத்தின் அனைத்து முற்போக்கு சக்திகளும் எதிர்க்க வேண்டும் என்றும், ஒன்றிய அரசின் அடக்குமுறை நடவடிக்கையைக் கண்டித்தும், இத்தகைய ஜனநாயகப் போராட்டங்களுக்கு ஆதரவு தெரிவிப்பது தொழிலாளர் வர்க்க இயக்கத்தின் பொறுப்பாகும் என்றும் வங்கித் துறையைச் சேர்ந்த தேசிய அளவிலான ஏழு சங்கங்களான **AIBEA, NCBE, AIBOC, BEFI, INBEF, INBOC** மற்றும் **AIBOA** ஆகியவை ஜூலை 20 அன்று போராட்ட ஆதரவு கூட்டறிக்கையை வெளியிட்டன.

நீதிபதி புயானின் வெளிப்படையான இந்தக் கருத்துக்கள் சமூக ஊடகங்களில் பரவலான விவாதத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்தியாவில் மாறுபட்ட கருத்துகளை வெளிப்படுத்தும் குரல்கள் ஒடுக்கப்படுகின்றன என்ற குற்றச்சாட்டுகளுக்கு அவரது கருத்து மேலும் வலுச்சேர்ப்பதாக உள்ளது.

DEARNESS ALLOWANCE FOR THE MONTHS OF AUGUST, SEPTEMBER & OCTOBER 2026 FOR COMMERCIAL BANK EMPLOYEES		
FOR SERVING EMPLOYEES – 27.83 % OF PAY (INCREASE OF 2.13 %)		
DA RATES FOR PENSIONERS – 47 SLABS INCREASE FOR AUGUST 2026 TO JANUARY 2027		
RETIRED PRIOR TO 01-01-1992 - 2329 SLABS OVER 600 POINTS		
Up to 1250	1251-2000	Above 2000
1560.43 % plus Rs 800	1560.43 % plus Rs 450	1560.43 %
RETIRED AFTER 01-11-1992 UPTO 31-03-1998 - 2192 SLABS OVER 1148 POINTS		
Up to 2400	2401-3850	Above 3850
767.20 % plus Rs 800	767.20 % plus Rs 450	767.20 %
RETIRED AFTER 01-04-1998 UPTO 31-10-2002 - 2058 SLABS OVER 1684 POINTS		
Up to 3550	3551-5650	Above 5650
493.92 % plus Rs 800	493.92 % plus Rs 450	493.92 %
RETIRED ON OR AFTER 01-11-2002 - 1907 SLABS OVER 2288 POINTS		
FOR THE ENTIRE BASIC PENSION AMOUNT – 343.26 %		
RETIRED ON OR AFTER 01-11-2007 - 1770 SLABS OVER 2836 POINTS		
FOR THE ENTIRE BASIC PENSION AMOUNT – 265.50 %		
RETIRED ON OR AFTER 01-11-2012 - 1369 SLABS OVER 4440 POINTS		
FOR THE ENTIRE BASIC PENSION AMOUNT – 136.90 %		
RETIRED ON OR AFTER 01-11-2017 - 891 SLABS OVER 6352 POINTS		
FOR THE ENTIRE BASIC PENSION AMOUNT – 62.37 %		
RETIRED ON OR AFTER 01-11-2022 – 27.83 POINTS OVER 123.03 POINTS		
FOR THE ENTIRE BASIC PENSION AMOUNT – 27.83 %		



அனைவருக்கும் 80வது இந்திய சுதந்திர தின நல் வாழ்த்துக்கள்

